தலைப்பு 104 - தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு.

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் அடங்கிய பொழிப்பு அறிக்கை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு 2019 ஆகொஸ்து 15 ஆந் திகதி வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆகொஸ்து 30 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த முனைப்பளியுள்ள அபிப்பிராயத்தின் அடிப்படை விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.
தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) இன் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
கணக்காய்வின் ஒரு பகுதியாக், நான் தொழில்துறைசார் நியாயப்கடுத்தலையும் (Professional Judgement) தொழில்துறை சந்தேகங்களையும் கணக்காய்வு முழுவதும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம பராமரிக்கின்றேன். என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்குபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் முன்னிலைப்படுத்தும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருடன் நான் தொடர்புகொள்கின்றேன்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரிவு 6(ஈ) மற்றும் பிரிவு 38 ன் படி நான் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்துகின்றேன்.

நிதிக்கூற்றுக்கள் முதற் தடவையாக சமர்பிக்கப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்ய முடியாது. மேலும், முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கைகள் தொடர்பான பரிந்துரைகள் செய்யப்படவில்லை.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை.

2018 நவம்பர் 21 ஆந் திகதிய **267/2018** ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அத் தேவைப்பாடுகளிலிருந்து விலகியிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றறிக்கையினுடைய பந்தி 3.2 இன் பிரகாரம், நிதிக் கூற்றுகள் தயாரிக்கம் போது வருமானம், செலவு மற்றும் ஏனைய பேரேட்டு மீதிகள் கிட்டிய ருபாய் பெறுமதியாக அறிக்கையிடப்படவில்லை. | சுற்றறிக்கை வழிகாட்டுதல்களிற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளல். | கிட்டிய ரூபாயில் கணித்து, நிதிக் கூற்றுகள் தயாரிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சுற்றறிக்கையினுடைய பந்தி 6 இன் பிரகாரம், ஆரம்ப மீதிகள் மற்றும் ஆண்டுக் காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துகள் வகைப்படுத்தப்படாது முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. | -DO- | கருத்துகள் தெருவிக்கப்படவில்லை. |
| (இ) | சுற்றறிக்கையினுடைய பந்தி 7(ஊ) இன் பிரகாரம், நிதிக் கூற்றுடன் கட்டுநிதி இணக்கக் கூற்று முன்னிலைப்படுத்தப்படவில்லை. | -DO- | -DO- |

**1.6**.2. நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்பகள் கண்டறியப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டு சேர்ப்புசெய்யப்பட்ட ரூபா. 148.8 மில்லியன் பெறுமதியான வாகனங்கள் நடப்பாண்டு கொள்வனவாக காட்டப்பட்டுள்ளது. | சேர்ப்பு செய்யப்பட்ட ஆண்டிலேயே துல்லியமாக கணக்குகள் தயாரிக்கப்படல். | இலங்கை சுங்கத் திணைக்களத்தால் இவ் அமைச்சிற்கு வாகனங்கள 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டன. |
| (ஆ) | ஊழியர் சேமலாப நிதியத்திற்கு கணணிக் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட ரூபா.10 மில்லியன் தொகை அமைச்சினுடைய அலுவலக உபகரணங்களின் ஆரம்ப நிலுவையின் கீழ் காட்டப்பட்டது. | அமைச்சின் சொந்த சொத்துகள் அடையாளம் கண்டு, கணக்குகள் தயாரிக்கபட வேண்டும். | இது அறிவிக்கப்பட்டுள்ளது, எதிர்காலத்தில் அலுவலக உபகரணத்தின் ஆரம்ப நிலுவையிலிருந்து இப் பெறுமதியை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

1.6.3. கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்பகள் கண்டறியப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா.827.76 மில்லியன் பெறுமதியான பயணிகள் வாகனத்தை 31 திசம்பர் 2018 ல் உள்ளவாறு உறுதிப்படுத்த பௌதீக கணக்கெடுப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | பயணிகள் வாகனங்கள் வருடாந்தம் பௌதீகரீதியாக சரிபார்க்கப்பட வேண்டும். | அதிக கடமைகள் காரணமாக, வாகன கணக்கெடுப்பிற்காக ஒரு இடத்தில் ஒரு நாளில் நிறுத்துவது கடினம். |
| (ஆ) | இளைஞர் விவகார பிரிவு தொடர்பில் ரூபா.21.47 மில்லியன் மற்றும் தலைமைத்துவ அபிவிருத்திக்கான தேசிய நிலையம் தொடப்பில் ரூபா.15.77 மில்லியன் நிதி அல்லா சொத்து கூற்றில் காட்டப்படவில்லை என்றாலும், தொடர்புடைய அட்டவணைகள் முன்வைக்கப்படவில்லை. | விபர அட்டவணைகள் பேணப்பட வேண்டும். | கருத்துகள் தெருவிக்கப்படவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1. செலவின முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புகள் கண்டறியப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீண்டுவரும் மற்றும் மூலதன செலவுகளிற்காக அதிக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக பாவனையின் பின்னர் முறையே 13.65 மற்றும் 59.43 சதவீதம் காணப்படுகின்றது. | செலவுப் பாதீடுகள் யதார்த்தமாகவும் சாத்தியப்பாட்டுடனும் தயாரிக்கப்பட வேண்டும். | 2018 ஒக்டோபரில் பாரளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையில், செயற்திட்டங்கள் தொடர்பான செலவுகள் மேற்கொள்ளப்பட வில்லை. |
| (ஆ) | இரண்டு மீண்டுவரும் செலவு விடயங்களின் மொத்த ஏற்பாடான ரூபா.3 மில்லியன் வேறு செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டது. | செலவுப் பாதீடுகள் யதார்த்தமாகவும் சாத்தியப்பாட்டுடனும் தயாரிக்கப்பட வேண்டும். | திறைசேரி அனுமதி மூலம், கோரப்பட்ட வாக்குப்பண ஏற்பாடுகள் மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்ப்ட்டுள்ளன. ஏனெனில் எதிர்பார்த்த செலவினங்கள் ஏற்படவில்லை. |
| (இ) | 22 செலவு விடயங்களிற்கான ரூபா.16.5 பில்லியன் வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளிற்கு மேலதிகமாக ரூபா.4.6 பில்லியன் தொகை குறை நிரப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் அவ் ஏற்பாடானது ஒப்பீட்டளவில் வரவு செலவுத் திட்டத்தின் 5 முதல் 621 சதவீத வீச்சிற்குள் காணப்படுகின்றது. | -DO- | பயிற்சி பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு மற்றும் அவர்களிற்கான கொடுப்பனவுகள் மற்றும் பாராளுமன்ற பிரதிநிதிகளிற்கான அமைச்சு வாகனங்களினுடைய நாளாந்த சேவைகளிற்கான செலவுகள் மற்றும் அலுவலக கட்டிடத்திற்கான வாடகை முற்பண கொடுப்பனவு. |

## 2.2. அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்க கூற்று

பின்வரும் அவதானிப்பு இது தொடர்பில் கண்டறியப்பட்டுள்து.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விலகிய அலுவலர்களுடைய ரூபா.852,241, இடை நிறுத்தப்பட்ட அலுவர்களது ரூபா.132,622, இளைப்பாறிய அலுவலர்களது ரூபா.319,030 நோய்வாய்ப்பட்ட அலுவலர்களது ரூபா.11,810 மற்றும் இடமாற்றம் பெற்ற அலுவர்களது ரூபா.915,551 மற்றும் சம்பளமற்ற விடுமுறையில் உள்ள அலுவலர்களது ரூபா.1,076,581 தீர்பனவு செய்யப்படாததுடன் அம் மீதிகள் 05 வருடங்களிற்கு மேலாக காணப்படுகின்றது. | கடன் நிலுவைகளின் தீர்ப்பனவு துரிதப்படுத்தப்பட வேண்டும். | இந்த கடன் நிலவைகளை வசூலிப்பதற்கான விசாரணைகள் தற்போதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. |

## 2.3 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்பகள் கண்டறியப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | 20 யூலை 2015 ஆம் திகதிய 01/2015(04) ஆம் இலக்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு மாத இறுதியிலும் வைப்புக் கணக்கில் மீதமுள்ள மீதியானது தொடர்ந்து வரும் மாத்தின முதல் வாரத்தில் தொடர்புடைய வருமான விடயத்திற்கு எடுத்துச்செல்லப்பட வேண்டும். இருப்பினும், 31 திசம்பர் 2018 திகதியில் தலைமைத்துவ அபிவிருத்திக்கான தேசிய நிலையம் தொடர்பில் வைப்புக் கணக்கில் ரூபா.2,916,832 தொகையான வருமானம் காணப்பட்டது. | சுற்றறிக்கை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா.2,906,352 தொகை அரச வருவாய்க்கு வரவு வைக்கப்பட்டுள்ளதுடன், எம்பிலிப்பிட்டிய தலைமைத்துவ அபிவிருத்திக்கான தேசிய நிலையத்தினுடைய வெளிவாரி நிகழ்ச்சி தொடர்பில் ரூபா.10,480 தொகை உரிய தரப்பினரிற்கு செலுத்துவதற்கு 2019 பெப்ரவரியில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா.5.26 மில்லியன் தொகையான வைப்புகள் மற்றும் ரூபா.21 மில்லியன் தொகையான வாடகை முற்பணம் செலுத்தப்பட்டிருந்தாலும், அது தொடர்புடைய சுற்றறிக்கை வழிகாட்டுதலிற்கு எதிரானது. மேலும், 2018 ற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை அடையாளம்காண நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | -DO- | 250/2016(I) ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைன் பந்தி (1) ன் பிரகாரம், அது முன்கூட்டியே செலத்தும் போது வாக்கு 1404 க்கு பற்றுவைக்கப்பட்டது. |
| (இ) | இளைஞர் படையணி நிலையங்களின் கட்டுமானம் தொடர்பில் ரூபா.77 மில்லியன் தொகையான பிடித்துவைத்தல் பணம் ஒருவருடத்திற்கு மேலாக வைப்பு கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. | நிலையங்களின் கட்டிட வேலைகளை துரிதப்படுத்த பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 31 திசம்பர் 2018 உள்ளவாறான தொடர்புடைய மீதிகள் 02 வருடத்தை கடக்கவில்லை. |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1. கடமைகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா.41,768 மில்லியன் தொகையானது, 15 அபிவிருத்தி கருத்திட்டங்களிற்கு ஒதுக்கப்பட்டதுடன் அவற்றின் நிதி செயலாற்றுகை 45 சதவீதமாக மட்டுமே காணப்பட்டது. இருப்பினும் அவற்றில், 9 கருத்திட்டங்களின் பௌதீக ரீதியான செயலாற்றுகை 58 சதவீதம் வரையிலும் குறைவாக இருந்தது. | செலவுப் பாதீடானது சரியாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் ஏற்பாடுகள் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். | பதில்கள் முன் வைக்கப்படவில்லை. |

3.2. பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சிற்கு சொந்தமான 23 வாகனங்கள் பிரதான செயற்பாடுகளிற்கு அப்பாற்பட்ட செயற்திட்ட மேற்பார்வைகளிற்கு பயன்படுத்தப்பட்டதுடன், மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் அவ் வாகனங்கள் தொடர்பில் ரூபா.8.7 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளன. | அமைச்சின் வளங்கள் அதன் நோக்கங்களை அடைய பயன்படுத்தப்பட வேண்டும். | பதில்கள் முன் வைக்கப்படவில்லை. |

3.3. எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை.

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 தேசிய பாதீட்டின் கீழான பொருளாதார இலக்குகளான தனிநபர் மொத்த தேசிய உற்பத்தி, மொத்த மெய் உள்நாட்டு உற்பத்தி, மொத்த முதலீடு, உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்துடன் உள்நாட்டு சேமிப்பு அடைந்து கொள்ளப்படவில்லை. | பொருளாதார இலக்கை அடைந்துகொள்ள அமைச்சின் பணிகள் திட்டமிடப்பட வேண்டும். | பதில்கள் முன் வைக்கப்படவில்லை. |

3.4. எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Results) பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ல் ரூபா.199.18 மில்லியன் தொகை பட்டதாரிப் பயிலுநர்களிற்கான படியாக செலவிடப்பட்டிருப்பினும், முன்வைக்கப்பட்ட அடிப்படை மற்றும் புள்ளிகள், | பட்டதாரிப் பயிலுநர்களது ஆட்சேர்ப்பு தொடர்பான கொள்கை செயற்திட்ட உருவாக்கம் முறைப்படுத்தப்பட வேண்டும். | பதில்கள் முன் வைக்கப்படவில்லை. |

செயற்திட்ட பயிற்சினுடைய எதிர்பார்ப்புகளை நிறைவுசெய்வற்கு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.5. உள்நாட்டு நிதியுதவித் திட்டங்களிலிருந்து செயற்படுத்தப்படும் செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கையில் விரைவான பொருளாதார மாற்றத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட மத்திய திட்ட முகாமைத்துவ அலகின் செயலாற்றுகை அறிக்கைகள் தயாரிக்கப்படவில்லை. கடந்த மூன்று வருடங்களிற்கான எதிர்பார்க்கப்படும் செயலாற்றுகை மற்றும் இலக்குகளை காட்டும் அறிக்கைகளும் தயாரிக்கப்படவில்லை. மேலும், ரூபா.34.86 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டமையுடன் அதன் 80 சதவீதம் பயன்படுத்தப்படவில்லை. | எதிர்பார்க்கப்படும் இலக்குகள் மற்றும் நோக்கங்களை காட்டும் அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்கால காலப்பகுதிக்கான எதிர்பார்க்கப்படும் இலக்குகள் மற்றும் நோக்கங்களை காட்டும் அறிக்கைகள் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

3.6. சொத்து முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புகள் கண்டறியப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் செயற்பாடுகள் 9 செயற்பாடுகளால் குறைக்கப்பட்டாலும், சாரதிகள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை மாற்றப்படவில்லை. | அமைச்சின் செயற்பாடுகளின் திருத்தத்திற்கேற்ப வகனங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். | பதில்கள் முன்வைக்கப்பட வில்லை. |
| (ஆ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களிற்கமைவாக, 2018 ஆம் ஆண்டிற்கான | குளாம் வாகனங்களின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை திறம்பட வடிவமைக்கப்பட | பதில்கள் முன்வைக்கப்பட வில்லை. |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுகளின் பிரகாரம், வாகனங்களிற்கான ஒதுக்கீட்டில் விசேட சேமிப்பு இல்லை என்பது உறுதிசெய்யப்பட்டது. 15 வாகனங்கள் மற்றும் 3 ஒதுக்கப்பட் வாகனங்களிற்கு மட்டுமே எரிபொருள் வழங்கப்பட்டது. இதன் விளைவாக 73 வாகனங்களிற்கான ரூபா.533.7 மில்லியன் விளைதிறனாக முகாமை செய்யப்படவில்லை. | வேண்டும். | |

3.7. அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு.

---

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்து.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நி.பி. 880(1) ன் பிரகாரம் பிணை வைப்பு செய்யவேண்டிய அலுவலர்களால் அவ்வாறு செய்யபடவில்லை. | நிதிப் பிரமாணங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். | பதில்கள் முன்வைக்கப்பட வில்லை. |

3.8. முகாமைத்துவத்தின் வினைத்திறனின்மை.

---

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்து.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தலைமைத்துவ அபிவிருத்திக்கான நிறுவனத்திற்கு உரித்தான 21 உத்தியோக பூர்வ வதிவிடங்களின் மாதாந்த வாடகை, மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2013 ஆம் ஆண்டு மதிப்பீட்டு பொருளாதார வாடகைக்கு அமைவாக வசூலிக்கப்பட்டமையுடன் புதிய மதிப்பீட்டிற்கமைய வாடகையை மாற்ற | வாடகை அடிப்படையில் உத்தியோக பூர்வ வதிவிடங்களை வழங்குவதற்கான நடைமுறை முறைமைப்படுத்தப்பட வேண்டும். | பதில்கள் முன்வைக்கப்பட வில்லை. |

நடவடிக்கை
எடுக்கப்படவில்லை.
மேலும், 3
பாவிக்கப்படாத மற்றும் 2
உத்தியோக பூர்வ
வதிவிடங்கள் தொடர்பில்
தகவல்கள்
தயாரிக்கப்படவில்லை.
உத்தியோகபூர்வ
வதிவிடங்கள் வழங்கும்
போது முறையான
அனுமதியோ அல்லது
நடைமுறையோ
நடைமுறைப்
படுத்தப்பவில்லை.

4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்து.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைத்திருக்கும் அபிவிருத்தி குறிக்கோள்கள் 2018 வருடாந்த மதிப்பீட்டிற்கான ஆறு பாரிய அபிவிருத்தி திட்டங்களுக்கு இலக்கை நிர்ணயித்துள்ளபோதும், அந்த இலக்குகளை அடைவதற்கு துல்லியமான தரவுகளை பெறுவதன் மூலம் நிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான முன்னேற்றத்தை நியாயமான பணிகள் வெளிப்படுத்தவில்லை. | நிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்குகளை நிறைவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில்கள் முன்வைக்கப்பட வில்லை. |

5. நல்லாளுகை

5.1. பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றல்

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அமைச்சு பொதுமக்களது கருத்துகளை ஏற்றுக்கொள்வதற்கான முறைப்பாட்டுப் பெட்டி பாவனையில் இல்லாததுடன் முறைப்பாடுகளை பதிவதனூடாக செயலாற்றுகைகள் மீளாய்வதுமில்லை. அமைச்சின் இணையத் தளம் ஊடாக முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்கான ஒரு முறைமையும் பாவனையில் இல்லை. | பொதுமக்களது முறைபாடுகளை எற்றுக்கொள்வதற்கு பொறிமுறை உருவாக்கல். | பதில்கள் முன் வைக்கப்படவில்லை. |

5.2. உள்ளக கணக்காய்வு

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அனுமதியளிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம், 16 பிரதான செயற்பாடுகள் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன, அவற்றில் திறன் அபிவிருத்தி, செயற்றிறன் மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தல்கள் செயற்படுத்தப்படவில்லை. | திட்டமிட்ட படி கணக்காய்வை செயற்படுத்தல். | அரசியலின் காலப்பகுதி மாற்றமானது அலுவலக இடத்தை மாற்ற காரணமாக அமைந்தது. ஆகையினால், திறன் அபிவிருத்தி செயற்பாடுகள் திட்டமிட்ட படி செயற்படுத்தப்படவில்லை. |

5.3. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு.

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மதிப்பாய்வு ஆண்டு காலப் பகுதியில் 3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் மட்டுமே நடாத்தப்பட்டது. | குறைந்தது 4 கூட்டங்களாவது நடாத்த நடவடிக்கை எடுத்தல் | 4 வது கூட்டம் திட்டமிட்டபடி நடைபெறவில்லை. |

**6.** மனித வள முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புகள் கண்டறியப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | 31 திசம்பர் 2018 ல் உள்ளவாறான அனுமதிக்கப்பபட்ட ஆளணியில் 60 வெற்றிடங்கள் காணப்பட்டது. இருப்பினும், தனிநபரிற்கான வருடாந்த செலவு 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 52 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. | வெற்றிடங்கள் நிரப்ப அல்லது அமைச்சின் செயற்திறனிற்கான வெற்றிடங்களின் தாக்கத்திற்கு அமைவாக அனுமதிக்கப்பட்ட ஆளணியை திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில்கள் முன்வைக்கப்பட வில்லை. |
| (ஆ) | ஊழியர்களின் பயிற்சி தேவைப்பாட்டிற்காக ரூபா.10 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பினும், 31 திசம்பர் 2018 ல் உள்ளவாறான நிதி செயலாற்றுகை 21 சதவீதமாக, மீளமைக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் 2018 ன் பிரதான நடவடிக்கையாக இனங்காணப்பட்டிருந்தது. | ஆடையாளம் காணப்பட்ட பயிற்சி தேவைப்பாடுகளிற்கு அமைவாக ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும். | பதில்கள் முன்வைக்கப்பட வில்லை. |